KANTON
LUZERN

Bildungs- und Kulturdepartement
**Dienststelle Berufs- und Weiterbildung**
**BIZ – Beratungs- und Informationszentrum für Bildung und Beruf**
**www.biz.lu.ch**

# பெற்றோருக்கான சிறுகுறிப்புகள்

**உங்கள் பிள்ளையின் முதலாவது தொழிற்றேர்வின் போது, பெற்றோராகிய நீங்கள்தான் முக்கிய பங்காளர். பாடசாலையிலிருந்து ஒரு தொழிற்கல்விக்குச் செல்லும் போது அல்லது மேற்கொண்டு கல்வியைத் தொடர்வதற்கு, வாலிபவயதினருக்கு உங்களது ஆதரவு தேவை.**

## பாடசாலையில் தொழிற்றேர்வு

தொழிற்றேர்வு ஆயத்தமானது, 7வது பாடசாலையாண்டிலே ஆரம்பிக்கும். மாணவ மாணவிகளுக்கு தொழிற்றேர்வு சம்பந்தமான முக்கியமான விடயங்களை அறிமுகப்படுத்துதல், இக் கற்பித்தலின் நோக்கமாகும். வாலிபவயதினர் தமது ஆர்வங்களையும் திறமைகளையும் அலசியாராய்வதுடன் வெவ்வேறுபட்ட தொழில்கள் பற்றியும் அறிந்துகொள்வார்கள்.

## தொழிற்றேர்வின் போது பெற்றோராகிய உங்களின் பங்கு முக்கியமானது


- உங்கள் மகளுடன் அல்லது உங்கள் மகனுடன் படிப்படியாக தொழிற்றேர்வு பற்றி அலசியாராய்ந்து தொழில் பற்றிய முதலாவது கருத்தை உருவாக்குங்கள்.
- உங்களது சுய தொழிற்றேர்வு பற்றியும் உங்களது அன்றாட தொழில் பற்றியும் உங்கள் மகளுடன் அல்லது உங்கள் மகனுடன் பேசுங்கள். இதன் மூலம் உங்கள் பிள்ளை தொழிலுலகு பற்றிய ஓர் அறிவைப் பெற நீங்கள் வாய்ப்பளிக்கின்றீர்கள்.
- உங்கள் பிள்ளையின் ஆர்வங்களையும் திறமைகளையும் பற்றிப் பேசுவதற்கு பொருத்தமான வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள். இது ஒரு வேளை ஒரு பொருத்தமான தொழிலுக்கான குறிப்புகளைத் தரலாம்.
- உங்கள் மகளுடன் அல்லது மகனுடன் தொழிற்றேர்வு கற்பித்தலின் போது கையாளப்படும் விடயங்கள் பற்றிப் பேசுவதுடன் அவர்களுடன் இணைந்து அது சம்பந்தமான அவர்களது ஆவணங்களைப் பார்வையிடுங்கள்.
- உங்கள் பிள்ளையின் தொழிற்கருத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள். தொழில் விருப்பத்தின் பின்னே உங்கள் மகள் அல்லது மகனின் ஒரு தனிப்பட்ட ஆர்வம் மறைந்திருக்கும்.
- உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துவதுடன் அவரது இத் தொழில் விருப்பம் சரியானதுதானா என்று பரிசீலிக்க, அடுத்து செய்யக்கூடிய நடவடிக்கையாக ஒரு தகவல்-நிகழ்வில் பங்குபற்றுதல் அல்லது ஒரு தொழிலைச் செய்து பார்த்தல் பற்றி கலந்துரையாடுங்கள்.
- வாலிப வயதினருக்கு தமது பெற்றோரின் இடைவிடாத உந்துதலும் தைரியமூட்டலும் தேவைப்படுகின்றது. அதே நேரம் உங்கள் மகள் அல்லது மகனை இயலுமானவரை சுயமாக இயங்க ஊக்குவியுங்கள்.

## இதனைத் தெரிந்து கொள்வது நல்லது ...

- இந்த முதலாவது தொழிற்றேர்வானது முற்றுமுடிவானதல்ல, ஆனால் அது ஓர் ஆரம்பமே. இது பிற்காலத்தில் கட்டியெழுப்பக் கூடிய, ஒரு முதலாவது படியாகும்.
  சுவிஸ் கல்வி முறை பல சாத்தியக்கூறுகள் வழங்குகிறது.
- நல்லது அல்லது கெட்டது என்று ஒரு தொழிலுமில்லை. ஒரு மனிதருக்குப் பொருத்தமாக, அவரது ஆர்வத்துக்கும் திறமைக்கும் ஏற்றதாக இருக்கும் ஒரு தொழில் நல்ல தொழிலாகும்.
- தொழிற்றேர்வில் சுறுசுறுப்பாக இயங்கும் வாலிபவயதினருக்கு, தீர்மானிக்கும் சூழ்நிலைகளைப் பழகுவதற்கும் பொறுப்புக்களைத் தாமே எடுத்துக்கொள்ளப் பழகுவதற்கும் அன்றாட வாழ்வில் வாய்ப்புகள் கிட்டும்.
- யுவதிகளுக்கும் வாலிபருக்கும் தொழிற்றேர்வு ஒரேயளவு முக்கியமானது. தொழில் பற்றிய தீர்மானம் ஆண்-பெண் என்பதில் தங்கியிருக்கக் கூடாது.

## தொழிற்றேர்வு–நேர அட்டவணை

இத் தொழிற்றேர்வு–நேர அட்டவணையானது, வாலிபவயதினருக்கு தொழிற்றேர்வு நடவடிக்கையின் போது ஆதரவளிக்கும், அனைத்து நடவடிக்கைகள் பற்றிய ஒரு தொகுப்பைத் தருகின்றது. அது மேற்பிரிவுப் பாடசாலைக்காலம் முழுவதையும் உள்ளடக்கி, எந்த நேரத்தில் எது திட்டமிடப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது.




## பன்முகப்பட்ட தகவல் வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்

- உங்கள் மகன் அல்லது மகளுடன் நீங்களும் BIZ க்கு வாருங்கள். ஒரு தகவல் கலந்துரையாடலின் போது, உங்கள் வினாக்களுக்கான விடைகளை ஓர் ஆலோசகர் அல்லது ஓர் ஆலோசகியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உங்களுக்கிருக்கின்றது. அதேபோல் பிரசுரங்களையும் அங்கு இரவலாகப் பெற முடியும்.

  BIZ திறந்திருக்கும்
  www.biz.lu.ch
- தொழில் தேர்வு பற்றி தகவல்
  www.beruf.lu.ch/berufswahl
- www.berufsberatung.ch > Berufe என்னும் இணையத்தளப்பக்கத்தில் தொழில்பற்றிய விரிவான விளக்கங்கள், தொழில் பற்றிய ஆவணப்படங்கள் அத்துடன் தொழிற்றேர்வுக்கு உதவக் கூடிய மேலதிகமான தகவல்களுமுள்ளன.
- www.beruf.lu.ch/studium > Gymnasien und Fachmittelschulen என்னும் இணையத்தளப்பக்கத்தில் மேலதிக கல்விக்கான பாடசாலை வாய்ப்புக்கள் பற்றிய சுருக்கமான விபரங்களையும் நீங்கள் காணலாம்.
- வெவ்வேறுபட்ட தொழில்கள் பற்றியும் மேற்கொண்டு கல்வி பயிலும் பாடசாலைகள் பற்றியும் காலம் தவறாது தகவல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அதனைப் பார்வையிட கீழேயுள்ள பக்கத்தைத் தரவிறக்கம் செய்ய வேண்டும்: www.beruf.lu.ch/sprung
- உங்கள் பிள்ளையை வேலை செய்து பார்க்கும் கல்விப்பயிற்சிகளை (Schnupperlehren) நிறைவு செய்ய ஊக்குவியுங்கள். அதற்கான நடைமுறை பற்றிய சிறுகுறிப்புகளையும் அக் கல்விப்பயிற்சியைச் செய்து பார்க்கக் கூடிய நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலையும் www.beruf.lu.ch/berufswahl > Schnupperlehre என்னும் இணையத்தளத்தின் கீழ் நீங்கள் காணலாம்.
- உங்கள் மகள் அல்லது மகனின் தொழிற்கல்விபயிலிடத்தைத் தேடுவதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள். அது சம்பந்தமான அறிவினைப் பெறுவதற்கான பெறுமதியான விடயங்களை www.beruf.lu.ch/berufswahl > Lehrstellensuche என்னும் இணையத்தளப்பக்கத்தில் நீங்கள் காணலாம். இன்னும் காலியாகவுள்ள தொழிற்கல்விபயிலிடங்கள் கீழ்க்காணும் இணையத்தளப்பக்கத்தில் தரப்பட்டிருக்கும்: www.berufsberatung.ch/lena
- கட்டாயப்பாடசாலையின் பின்பு இடைநடுவிலான தீர்வுகள் பற்றிய ஒரு தொகுப்புரையைப் பார்வையிட, நீங்கள் கீழ்க்காணும் இணையத்தளப்பக்கத்தைத் தரவிறக்கம் செய்யலாம்: www.beruf.lu.ch/berufswahl > Zwischenlösungen
- உதவித்தொகை
  www.stipendien.lu.ch